பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# பெண்ணுரிமை போற்றும் இஸ்லாம்

பெண்ணுரிமை குறித்து இந்த நூற்றாண்டில் அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது. பெண்களின் அடிமைச் சங்கிலிகளை உடைக்க பல இயக்கங்களும், அரசுகளும் முன் வந்து விட்டன. பெண்களுக்குக் குரல் கொடுப்பதற்கு மாதர் சங்கங்கள் பல முளைத்து விட்டது. பெண்களின் உரிமைக்காகச் சட்டங்கள் இயற்றப்பட்டும் வருகிறது.

பெண்களை ஒரு போகப் பொருளாகவே பார்த்து, பெண் என்றால் அவள் கணவனுக்குப் பணிவிடை செய்வதும், அவனுடைய இச்சையைத் தீர்த்து வைப்பதும், அவனுக்காகக் குழந்தை பெற்றுக் கொடுப்பதும் தான் அவளது வேலை என்று பெண்களை அடிமைகளைப் போல் நடத்தி வந்துள்ளனர்.

பெண்கள் கல்வி கற்கிறார்கள். அதிகார மையங்களில் அமர்ந்து விட்டார்கள். ஆட்சியாளர்களாக வலம் வருகிறார்கள் இப்போது கூட சில இடங்களில் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகிறது.

- பெண்களுக்குக் கல்வி கற்கும் உரிமை இல்லை.
- சம்பாதிக்கும் உரிமை இல்லை.
- சொத்துரிமை இல்லை.
- கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இல்லை.
- பிடிக்காத கணவனை விவாகரத்துச் செய்யும் உரிமை இல்லை.
- கணவன் இறந்தால் , மறுமணம் செய்யும் உரிமை இல்லை.
- கணவன் இறந்தால் மொட்டை அடித்து, வெள்ளை ஆடை அணிந்து துறவியைப் போல் வாழ வேண்டும்.
- மாதவிடாய் போன்ற இயற்கை உபாதைகளைக் கூட, தீட்டு என்ற பெயரில் அவளை வீட்டை விட்டே ஒதுக்கி வைத்துக் கொடுமை செய்தல்.
- அவர்களுக்குக் கடவுளை வழிபடும் உரிமை கூட இல்லை.
- வேதங்களை கற்கும் உரிமை இல்லை.
- வழிபாட்டுத் தலங்களில் அனுமதிப்பதில்லை.

உலக அளவில் தற்போது பேசப்பட்டு வரக்கூடிய பெண்களின் பல உரிமைகளை 1400 ஆண்டுகளுக்கு முன்பாகவே இஸ்லாம் வழங்கி விட்டது.

இதை ஒரு துண்டுப் பிரசுரத்தில் விளக்கி விட முடியாது என்று சொல்லும் அளவிற்குப் பல விதமான உரிமைகளையும் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கி உள்ளது.

பெண்களைக் வழிபாட்டுத்தளங்களுக்கு அனுமதிக்க வேண்டும் என்று ஒரு பிரிவினரும் அனுமதிக்கக் கூடாது என்று ஒரு பிரிவினரும் இந்தக் காலத்திலும் போராட்டங்கள் நடத்தி வருவதைப் பார்க்கிறோம்.

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் பெண்களுக்கு உரிமையை வழங்கி அவர்களைப் பேணிப் பாதுகாத்தது. பெண்களின் கண்ணியத்தை உயர்த்தியது. இதைப் பற்றி விவரித்து எழுத வேண்டும் என்றால் பக்கங்கள் போதாது.

எனவே பெண்களுக்கு இஸ்லாம் வழங்கிய உரிமைகள் தொடர்பான அல்குர்ஆன் வசன எண்கள் சிலவற்றை மட்டும் கீழே தந்துள்ளோம்.

- பெண் குழந்தை சுபச்செய்தி – அல்குர்ஆன்:16:58
- கல்வி கற்கும் உரிமை – அல்குர்ஆன்:9:71– புகாரி–101
- வழிபாட்டு தலங்களுக்கு செல்லும் உரிமை – புகாரி–900, 873, 5238
- சம்பாதிக்கும் உரிமை – அல்குர்ஆன்:4:32
- பெற்றோர் சொத்தில் பெண்களுக்கு உரிமை – அல்குர்ஆன்:4:7
- கணவன் சொத்தில் பெண்களுக்கு உரிமை – அல்குர்ஆன் 4:12
- சகோதரன் சொத்தில் பெண்களுக்கு உரிமை – அல்குர்ஆன் 4:176
- பிள்ளைகள் சொத்தில் பெண்களுக்கு உரிமை – அல்குர்ஆன் 4:11
- உறவினர் சொத்தில் பெண்களுக்கு உரிமை – அல்குர்ஆன்:4:7
- கணவனைத் தேர்வு செய்யும் உரிமை – அல்குர்ஆன்:4:19
- மறுமணம் செய்யும் உரிமை – அல்குர்ஆன்:2:232
- ஜீவனாம்சம் பெறும் உரிமை – அல்குர்ஆன்:2:236,241
- விவாகரத்து பெறும் உரிமை – அல்குர்ஆன்:4:128– புகாரி 5273
- கற்பு நெறியில் ஆணும் பெண்ணும் சமமே – அல்குர்ஆன் 24:30, 31
- தண்டனையில் ஆணும் பெண்ணும் சமமே – அல்குர்ஆன்:24:2
- இறைவனின் கூலியில் ஆணும் பெண்ணும் சமமே – அல்குர்ஆன்:4:124
- அவதூறு ஏற்படாமல் பாதுகாத்த இஸ்லாம் – அல்குர்ஆன்:24:23
- கண்ணிய ஆடை வழங்கிய இஸ்லாம் – அல்குர்ஆன்:33:59
- மணக் கொடை பெறும் உரிமை – அல்குர்ஆன்:4:4
- பெண்களுக்குப் பிரச்சார உரிமை – அல்குர்ஆன்:9:71
- பெண்களுக்காகத் திடல் தொழுகை – புகாரீ 351, முஸ்லிம் 1616

1400 ஆண்டுகளுக்கு முன் கல்வி அறிவு பெறாத காலத்தில் பெண்களுக்கான உரிமைகளை இஸ்லாம் முழுமையாக வழங்கி விட்டது. போராட்டங்கள் நடத்திப் பெற முடியாத உரிமைகளைக் கூட இஸ்லாமியப் பெண்கள் இலகுவாகப் பெற்று விட்டனர்.

பெண்கள் கண்ணியமாக உடுத்தும் ஆடைதான் அவர்கள் அடிமைப்படுத்தப் படுவதாகச் சிலர் அரை வேக்காட்டு தனமாகப் பிதற்றி வருகிறார்கள். பெண் ஆட்சியாளர்கள் ஹிஜாபிற்கு நெருக்கமாக அடைகளை அணிந்து பொதுச் சமூகத்தில் வலம் வருவது அவர்களின் காமாலை கண்ணுக்குத் தெரிவதில்லை. ஜெயலலிதா, மம்தா பேனர்ஜி போன்றோர் இதற்குச் சான்றாகவும் உள்ளனர்.

ஹிஜாப் அணிந்த பெண்கள் மாநில அளவில் கல்வியில் முதலிடம் பெறுகிறார்கள். பல தங்கப் பதக்கங்களை வெல்கிறார்கள். முன்பு அணிந்த ஆடையை விட ஹிஜாப் தங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது என்று இஸ்லாத்தை ஏற்ற பல பிரபலங்கள் தற்போது கூறி வருகிறார்கள்.

ஆண்களை விடப் பெண்கள் கூடுதலாக ஆடை அணிவது அவர்களுக்குப் பாதுகாப்பானது என்பது சிந்தனை உள்ள அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். மூளை மழுங்கியவர்களைக் கண்டு கொள்ளாமல் வெகுஜன மக்களுக்குப் பெண்ணுரிமை போற்றும் இஸ்லாம் குறித்து எடுத்துச் சொல்வோம்.

## பெண்ணுரிமை போற்றும் இஸ்லாம்

மே 10 முதல் ஜீன் 10 வரை ஒரு மாத கால தொடர் பிரச்சாரம்

வெளியீடு : தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்